9 பாடம்

# மீண்டும் வாழ்வு

*மேரியும் அவள் அம்மாவும் மிகுந்த வறுமையில் கஷ்டப்பட்டனர். அப்போது பிறரின் ஆலோசனைப்படி செவன்த் - டே அட்வென்ட்டிஸ்ட் அலுவலகம் வந்து தொற்காள் சங்கம் எனும் அமைப்பிலிருந்து தேவையான பணம் பெற்று மகிழ்ந்தார்கள். 'தொற்காள் சங்கம்'பற்றிப் பார்ப்போமா?*

தொற்காள் என்று ஓர் அருமையான பெண் இருந்தாள். அவள் மிகவும் பக்தி உள்ள பெண்மணி! தேவனுக்குப் பயந்தும், தேவனை நேசித்தும் வாழ்ந்தாள். மனிதர்களிடமும் மிகவும் அன்பாயிருந்தாள். இந்தப் பெண்மணிக்கு யாருமே உறவு என்று இல்லை. தனியாகத்தான் வாழ்ந்தாள்.

ஆனால், சோம்பேறியாகவோ, சுயநலமாகவோ வாழவில்லை. பிறர் நலத்தையே தன்மனதில் கொண்டு வாழ்ந்தாள். தொற்காள் அழகாகவும், அருமையாகவும் ஆடைகள் தயாரிப்பாள். கிழிந்துபோன ஆடைகளைக் கிழிசல் தெரியாவண்ணம் நேர்த்தியாகத் தைத்துக்கொடுப்பாள்.

இந்தப் பெண் யோப்பா பட்டணத்தில் வாழ்ந்து வந்தாள். தமீத்தாள் என்னும் இவளுடைய பெயருக்கு கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தமாகும். இந்த தொற்காள் என்னும் சீஷி நல்ல செயல்களைச் செய்து வந்தாள். மிகுதியாகத் தருமங்களையும் செய்து வந்தாள்.



தொற்காளின் சேவை அப்பட்டணத்து மக்களை மிகுந்த மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. அநேக ஏழைக் குழந்தைகளும், பெரியவர்களும் தொற்காளின் உதவியால் மிகவும்

## மனன வசனம்

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன். இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.**

**ரோமர் 1:16.**

பயனடைந்தார்கள்.

இவ்வாறாக தொற்காளின் சுயநலமற்ற அன்பான சேவை யால் அப்பட்டணத்தார் மிகவும் மகிழ்ந்தார்கள். தொற்காளை மிகவும் நேசித் தார்கள். அனைவருக்கும் அம்மாபோலவும், சகோதரி போலவும் அன்புடன் ஆடைகள் தைத்துக் கொடுத்து உதவி புரிந்து வந்த தொற்காள் வியாதிப்பட்டாள்.

வியாதியால் துன்புற்ற தொற்காளை அப்பட்டணத்தார் மிகவும் அன்பாகக் கவனித்தார்கள். வைத்தியங்கள் பல செய்தார்கள். மருத்துவரை அழைத்து வந்தார்கள். ஆனால், எந்த முயற்சியும் பலன் தரவில்லை. தொற்காள் ஒருநாள் இறந்துவிட்டாள் என்ற செய்தி அப்பட்டணம் எங்கிலும் பரவியது.

தங்கள் சொந்தக் குடும்பத்தினர் ஒருவரை இழந்ததைப் போன்று பட்டணத்தார் தவித்தனர். பெண்கள் மிகவும் பெருங்குரலெடுத்து அழுதார்கள். ஆண்கள் செய்வதறியாது கவலையோடிருந்தார்கள்.

பேதுரு அப்போஸ்தலர் லித்தா ஊருக்கு வந்திருக்கிறார் என்ற செய்தி யோப்பா பட்டணத்தாருக்குத் தெரியவந்தது.

இறந்துபோன தொற்காளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்திருந்தனர்; ஆனாலும் இயேசுவின் நாமத்தில் பேதுருவின்மூலம் தொற்காள் உயிர்பெறக்கூடும் என விசுவாசித்தனர், பேதுருவும் உடனே வந்தார். விதவைகள் அழுது, தொற்காள் தங்களுக்குச் செய்து தந்த ஆடைகளை பேதுருவுக்குக் காண்பித்தனர்.



# செய்தி

**பிறருக்கு நாம் உதவும்போது**
**நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

தொற்காளின் அருமையான அன்பான சேவையை மக்கள்பேதுருவிடம்கூறினர்.

பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பினார். பின் முழங்கால்படியிட்டு ஜெபித்தார் அதன்பின்னர் தொற்காள் என்னும் மறுபெயர் கொண்ட தபீத்தாளைப் பார்த்து, ‘‘தபீத்தாளே எழுந் திரு’’ என்றார். தொற்காள் கண்களைத் திறந்து எழுந்து உட்கார்ந்தார். பேதுரு கை கொடுத்து அவளை எழுப்பினார். பின்னர் யாவரையும் உள்ளே வருமாறு அழைத்தார். அனைவரும் தேவனைத் துதித்தார்கள்.

இச்செயலால் பட்டணத்தில் அநேகர் தேவனிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

என் செல்லமே! நீ தேவனை விசுவாசிக்கிறாயா? தொற்காளைப்போன்று பிறருக்குஉதவுவாயா?

## செய்முறை:

*தொற்காள் ஏழைமக்களுக்கு ஆடைகள் தைத்துக்கொடுத்து உதவினாள். இங்கே கட்டத்தினுள் தொற்காள்செய்த வேலைபற்றிய படங்கள் மாறிக்கிடக்கின்றன. ஓர் உடையைத் தயாரிக்க முதலிலிருந்து என்ன செய்யவேண்டும் என்பதைக் காட்டும்படி, படத்தின்கீழ் சரியான எண்ணை எழுது.*

## புதிர் 9

